# <u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
## <u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
## <u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
## <u>MCOP.No.193/2022</u>

பெயர் : அபிக்குமார்

த/பெ. : சேகர்

தேதி : 02.02.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் 12ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். விபத்து சமயம் எங்கிருந்து எங்கு போனீர்கள் என்றால் நானும் எனது நண்பர் சக்தியும் செம்பனார்கோவிலிருந்து நல்லாடை நோக்கி சென்றுகொண்டிருந்தோம். சக்தி என்னுடன் படிக்கும் நண்பர் ஆவார். இருசக்கர வாகனத்தை சக்திதான் ஓட்டினார். சக்தி என்பவர் மைனர் என்பதால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிச்செல்வது தவறாகும். எனது நண்பருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பது விபத்துக்கு முன்பே தெரிந்திருந்தால் நான் அவருடன் பயணம் செய்யாமல்இருந்திருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். விபத்தின் போது நானும் எனது நண்பரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.8 விடுவிப்பு சான்றிதழில் நான் நல்ல நிலையில் விடுவிப்பு பெற்றதாக சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு மருந்து மாத்திரைகள் மட்டும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நண்பர் தான் கவனக்குறைவால் இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ9, 10 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. நான் மருத்துவக்குழு முன்பு ஆஜராகி எனக்கு வழங்கிய ஊனச்சதவீதம் மிகைப்படுத்தி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்துக்கு எனது கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. எனது காயத்திற்கும், இழப்பீட்டிற்கும் ஏற்க நஷ்ட ஈடு கோராமல் மிகைப்படுத்திக்கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.